**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை**
**முன்னிலை : திரு. வ. இராமலிங்கம், பி.எஸ்.சி., பி.எல்.,**
**சார்பு நீதிபதி, அருப்புக்கோட்டை**

**2024 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 18 ஆம் நாள் திங்கட்கிழமை**

**வ.வி.எண்.6/2024 இன் அ.வ.எண்.27/2019**

1. மகாலட்சுமி
2. லீலாவதி
3. கணேசன்
4. நாகஜோதி
5. கண்ணன்
6. ராஜேஸ்வரி
7. வெங்கடேஷ் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. தனலட்சுமி
2. ராமசாமி (இறப்பு)
3. சார்பதிவாளர்,
   சார்பதிவாளர் அலுவலகம்,
   அருப்புக்கோட்டை
4. சுப்புலட்சுமி
5. சத்தியராஜ் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது இந்நீதின்றம் முன்பாக இறுதியான விசாரணைக்காக 26.02.2024 அன்று வந்தபோது மனுதாரர்தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.கண்ணன் அவர்கள் ஆஜராகியுள்ள நிலையிலும் 1, 4, 5 எதிர்மனுதாரர்கள்தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.ஆர்.முரளிதரன், அவர்கள் ஆஜராகியுள்ள நிலையிலும் 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியுள்ள நிலையிலும் 2ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையிலும் இருதரப்பும் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

1. மனுவில் கண்டுள்ள ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் காலதாமதமாக தாக்கல் செய்யும் மனுவில் கண்ட ஆவணங்களை ஏற்றுக்கொண்டு உத்தரவிடக் கோரி சிபிசி ஆர்டர் 7 ரூல் 14(2) மற்றும் பிரிவு 151 சிபிசியின்படி

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்:–</u>

மனுவில் கண்டுள்ள ஆவணங்கள் தற்போது நகல் எடுக்கப்பட்டு கிடைக்கப் பெற்ற ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்ய இயலவில்லை. மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமானது. எனவே மனுவில் கண்ட ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் காலதாமதமாக தாக்கல் செய்வதை ஏற்றுக்கொண்டு உத்தரவிடக்கோரி மனுதாரர் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

3 .<u>1, 4, 5 எதிர்மனுதாரர்கள்தரப்பு மறுப்புரையின் சுருக்கம்:–</u>

மனுதாரர்கள் மனுவில் கண்ட ஆவணங்களை ஏற்றுக் கொள்ளக் கோரி இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளனர். மனுவில் கண்டுள்ள ஆவணங்கள் அ.வ. எண். 249/2014 வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல்கள் ஆகும். மனுவில் கண்டுள்ள ஆவணங்கள் வழக்கு தாக்கல் செய்யும்போதே மனுதாரர்கள் வசம் இருந்துள்ள ஆவணங்கள் ஆகும். வழக்குத் தாக்கல் செய்யும்போதே மேற்படி ஆவணங் களை தாக்கல் செய்யவேண்டும் என்பது நன்கு தெரிந்துள்ள நிலையில், அசல் வழக்கு தாக்கல் செய்யும்போதே மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை மனுதாரர்கள் தாக்கல் செய்திருக்க வேண்டும். மேலும் 2 மற்றும் 3 வது ஆவணங்கள் ஒருதலை தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் நகல்கள் ஆகும். மேலும் மனுவில் கண்ட ஆவணங்களை கால தாமதமாக தாக்கல் செய்துள்ளதற்கு மனுதாரர்கள் மனுவில் சரியான காரணங்களைக் கூறவில்லை. இம்மனுவை அனுமதித்தால் எதிர்மனுதாரர் களுக்கு மிகுந்த பாதிப்பு ஏற்படும். எனவே மனுதாரர்களின் மனுவை எதிர்மனுதாரர் களின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்க வேண்டும்.

4. இம்மனுவில் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. <u>தீர்வு:–</u>

மனுதாரர்கள்தரப்பில், மனுவில் கண்டுள்ள ஆவணங்கள் தற்போது நகல் எடுக்கப் பட்டு கிடைக்கப்பெற்ற ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்ய இயல வில்லை என்றும் மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும் எனவே

மனுவில் கண்ட ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் காலதாமதமாக தாக்கல் செய்வதை ஏற்றுக்கொண்டு வழக்கை மேல்நடத்த உத்தரவிட என்றும் கூறப் பட்டுள்ளது.

6. 1, 4, 5 எதிர்மனுதாரர்கள்தரப்பில், மனுவில் கண்டுள்ள ஆவணங்கள் வழக்கு தாக்கல் செய்யும்போதே மனுதாரர்கள் வசம் இருந்துள்ள ஆவணங்கள் என்றும் வழக்குத் தாக்கல் செய்யும்போதே மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யவேண்டும் என்பது நன்கு தெரிந்துள்ள நிலையில், அசல் வழக்கு தாக்கல் செய்யும்போதே மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை மனுதாரர்கள் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும் மேலும் மனுவில் கண்ட ஆவணங்களை காலதாமதமாக தாக்கல் செய்துள்ளதற்கு மனுதாரர்கள் மனுவில் சரியான காரணங்களைக் கூறவில்லை என்றும் எனவே மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. எதிர்மனுதாரர்கள்தரப்பில், மனுவில் கண்டுள்ள ஆவணங்கள் வழக்கு தாக்கல் செய்யும்போதே மனுதாரர்கள் வசம் இருந்துள்ள ஆவணங்கள் என்றும் வழக்குத் தாக்கல் செய்யும்போதே மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யவேண்டும் என்பது நன்கு தெரிந்துள்ள நிலையில், அசல் வழக்கு தாக்கல் செய்யும்போதே மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை மனுதாரர்கள் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும் மேலும் மனுவில் கண்ட ஆவணங்களை காலதாமதமாக தாக்கல் செய்துள்ளதற்கு மனுதாரர்கள் மனுவில் சரியான காரணங்களைக் கூறவில்லை என்று கூறி மறுப்புரை தாக்கல் செய்திருந் தாலும் எதிர்மனுதாரர்தரப்பு மறுப்புரையைப் பார்க்கும்போது, மனுதாரரின் மனுவினை மறுக்கும்வகையில் மேம்போக்காக மறுப்புரை தாக்கல் செய்யப் பட்டுள்ளதாகக் காணப் படுகிறதே தவிர இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனு தாரருக்கு எந்தவகையில் பாதிப்பு ஏற்படும் என்பது குறித்து எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித கூற்றும் கூறப்பட வில்லை. எனவே, மனுதாரர்தரப்பில் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணம் மனுதாரர்தரப்பு வழக்கை நிரூபிக்கக்கூடிய ஆவணம் என்று கூறப்பட்டுள்ள நிலையில், மேற்கூறப்பட்ட காரணங்களின் அடிப்படையிலும் மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையைக் கருத்திற் கொண்டும் மனுதாரருக்கு வாய்ப்பளிக்கும் பொருட்டு, இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8. முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, இத்திறந்த நீதிமன்றத்தில் இன்று 18.03.2024ம் தேதி அவையறியப் பகரப்பட்டது.

V RAMALINGAM Digitally signed by V RAMALINGAM

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>மனுதாரர்தரப்பு சாட்சிகள், சான்றவாணங்கள் :</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:–</u> இல்லை

V RAMALINGAM Digitally signed by V RAMALINGAM

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை
வ.வி.எண்.6/24 இன்
அ.வ.எண்.27/2019
உத்தரவு நாள் – 18.03.2024